செ.வெ.எண்: 724 நாள்: 04.09.2008.

# அரசு செய்தி வெளியீடு – 4.9.2008

பீகார் மாநிலத்தையே நிலைகுலையச் செய்த வரலாறு காணாத வெள்ளப் பெருக்கின் காரணமாக பல இலட்சம் ஏழையெளிய மக்கள் வீடிழந்தும், நூற்றுக்கணக்கானோர் உயிர், உடைமைகளை இழந்தும் அந்த மாநிலமே சோகக் காடாக மாறி வருகிற நிலைமையைக் கண்டு அதிர்ச்சியும் துயரமும் அடைந்த மாண்புமிகு தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்கள், அந்த மாநிலத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு தமிழக மக்களின் சார்பில் ஆறுதலை வழங்குவதோடு, அந்த மாநிலத்தின் நிவாரணப் பணிகளுக்காக தமிழக அரசின் சார்பில் முதலமைச்சர் நிவாரண நிதியிலிருந்து பத்து கோடி ரூபாய் வழங்குவதாகவும் இன்று அறிவித்துள்ளார்கள். இதற்கான காசோலை இன்றையதினமே பீகார் மாநில முதல்வருக்கு அனுப்பி வைக்கப்படுகிறது.

வெளியீடு: இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை 9